
# மனம் கவரும் மனோரா கலங்கரை விளக்கம்




பதிப்பாசிரியர்
முனைவர் சீ. வசந்தி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி

ஆசிரியர்
ச. செல்வராஜ்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2012, திருவள்ளுவர் ஆண்டு - 2043

# மனம் கவரும் மனோரா
# கலங்கரை விளக்கம்


பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

ஆசிரியர்

**ச. செல்வராஜ்**



வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

2012, திருவள்ளுவராண்டு-2043

# அச்சிட்டோர் விவரம்


| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 2012 |
| வெளியீடு எண் | : | 258 |
| நூலின் பெயர் | : | மனம் கவரும் மனோரா கலங்கரை விளக்கம் |
| பதிப்புரிமை | : | தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் சீ. வசந்தி, எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.,<br>ஆணையர் (பொறுப்பு) |
| ஆசிரியர் | : | ச. செல்வராஜ்<br>மண்டல உதவி இயக்குநர் (ஓய்வு) தஞ்சை |
| மொழி | : | தமிழ் |
| எழுத்தின் அளவு | : | 12 புள்ளிகள் |
| தாள் அளவு | : | 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | 30 |
| விலை | : | ரூ. 7.00 |
| அச்சிட்டோர் | : | தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை<br>ஆல்சு சாலை, எழும்பூர்,<br>சென்னை - 600 008 |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பதிப்புரை | ... | i |
| முன்னுரை | ... | iii |
| 1. தஞ்சாவூர் தர்பார் மண்டப மராட்டியர்கால ஓவியங்கள் | ... | 1 |
| 2. மனோரா | ... | 5 |
| 3. நினைவுச்சின்னம் குறித்த கல்வெட்டுகள் | ... | 7 |
| 4. தஞ்சையை ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னர்கள் | ... | 10 |
| 5. துணைநின்ற நூல்கள் | ... | 13 |
| பிற்சேர்க்கை | | |
| வரைபடங்கள், நிழற்படங்கள் | | |
| மனோரா நினைவுச்சின்னத்தின் வெட்டுத்தோற்றம் | ... | 15 |
| மனோரா நினைவுச்சின்னத்தின் நிலமட்டத்து வரைபடம் | ... | 16 |


முன் அட்டை: மராட்டிய அரண்மனையின் தோற்றம்
சார்ஜா மாடி, தஞ்சாவூர்
பின் அட்டை: மனோரா நினைவுச்சின்னத்தின்
வெளிப்புறத் தோற்றம்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.,
ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல்துறை,
ஆல்சு சாலை,
தமிழ்வளர்ச்சி
வளாகம்,
சென்னை-600 008.
நாள் : 31.8.2012

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்பும், கட்டடக்கலை அழகும் மிக்க 85 சின்னங்களைப் பாதுகாத்து வருகின்றது. அவை கோயில்கள், அரண்மனைகள், மண்டபங்கள், நினைவுத்தூண்கள், குளங்கள், வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்கள், கல்வெட்டுகள் ஆகியவைகளாகும். அத்தகைய சிறப்பு மிக்க நினைவுச்சின்னங்களில் முக்கியமானதும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகவும் திகழ்வது மனோராவாகும்.

ஆங்கிலேயர்களுக்கும், பிரான்சு நாட்டினருக்கும் இடையில் கி.பி. 1814-இல் நடந்த போரில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். ஆங்கிலேயர்களுடன் நட்பு கொண்ட தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோஜி அதன் நினைவாக நினைவுத்தூண் ஒன்றை பட்டுக்கோட்டை அருகில் சரபேந்திர ராஜப்பட்டினம் என்ற பட்டினத்தை ஏற்படுத்தி அங்கு 'மனோரா' நினைவுத்தூணை எடுத்தார். முகமதியக் கட்டடக்கலையின் சிறப்பானதாகக் கருதப்படும் 'மினார்' என்ற கட்டட அமைப்பினைக் கொண்டு திகழ்வதால், இது மினார் என வழங்கப்பட்டு பின்னர் 'மனோரா' என மக்களின் பேச்சு வழக்கில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். மனோரா பற்றிய வரலாற்றுச் செய்திகள் பொதுமக்களும் அறியும் வகையில் எளிய நடையில் எழுதியுள்ள இந்நூலாசிரியர்

திரு. ச. செல்வராஜ் பாராட்டுக்குரியவர். இந்நூலை ஒளிஅச்சு செய்து, அட்டைப்படம் வடிவமைத்த திருமதி. ச. சரஸ்வதி, அச்சுக்கோர்ப்பாளர், மற்றும் அச்சிட்டு நூல் வரவாக்கிய சீ. தாமோதரன், மெஷின் மைண்டர், அச்சுப்பிரிவினர் அனைவருக்கும் எனது மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

வரலாற்று நூல்களை வெளிக்கொணர்வதில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பெரும்பங்காற்றி வருகின்றது. அவ்வாறு தற்போது வெளியிடப்படும் 'மனோரா கலங்கரை விளக்கம்' நூலைப் படித்து அதன் வரலாறை அனைவரும் அறிந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சி. வசந்தி

# முன்னுரை

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சாவூர் கலைகளின் இருப்பிடமாகவும் திகழ்ந்து வருகின்றது. வளம் பல கொழிக்கும் தஞ்சைப் பகுதியை கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை முத்தரையர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுக்குப் பின் சோழர்கள் கி.பி. 850 முதல் 1256 வரையிலும், அவர்களைத் தொடர்ந்து பாண்டியர்களும், விசயநகர மன்னர்களும், கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டில் ஆட்சியை செலுத்தினர். இவர்களை அடுத்து தஞ்சை நாயக்கர்கள் கி.பி. 1541-1674 வரையிலும், அடுத்து இறுதியாக தஞ்சையை மராட்டிய மன்னர்கள் கி.பி. 1674 முதல் கி.பி. 1856 வரையிலும் ஆட்சி புரிந்து பலவகையிலும் தஞ்சைக்கு புகழ் சேர்த்துள்ளனர். கட்டடக் கலைக்கும், கலை இலக்கிய வரலாற்றிற்கும் இந்த அரச மரபினர் செய்துள்ள தொண்டு இன்றும் உலக மக்களை வியக்கச் செய்கின்றது.

## மராட்டியர் காலத்தில் தஞ்சாவூர்

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலக்கட்டத்தில் தென் தமிழகத்தில் சிறப்புடன் ஆட்சிபுரிந்து வந்த விசயநகரப் பேரரசு தன் வலிமையை இழந்தது. அதுசமயம் மதுரை மற்றும் தஞ்சாவூர் பகுதியில் மராட்டியர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த தலைப்பட்டனர். மராட்டியத்தில் உள்ள சிவாஜியின் உடன்பிறவா சகோதரரான வெங்கோஜி, தஞ்சைக்கு சிவாஜியால் அனுப்பப்படுகின்றார். இவர் விசயநகர மன்னரான விசயராகவருடைய மகனுக்கு உதவி புரியவும், தாழ்ச்சியில் உள்ள விசயநகரப் பேரரசைக் காக்கவும் வந்து சேருகின்றார். ஆனால் சூழ்நிலை காரணமாகவும், மக்களின் ஆதரவு காரணமாகவும் வெங்கோஜியே தஞ்சையைத் தன் வசமாக்கி மராட்டிய வம்சத்தைத் தோற்றுவித்து ஆளவேண்டிய நிலை ஏற்படுகின்றது. மராட்டிய மாமன்னர் சிவாஜியும், தென்னிந்தியாவில்

இவர்களது ஆட்சி மலரட்டும் என வாழ்த்தி வழிவிடுகின்றார். இவருக்குப் பின்னர் ஏகோஜி, ஷகாஜி, சரபோஜி, துக்கோஜி என ஒருவர் பின் ஒருவராக ஆட்சிக் கட்டிலில் ஏறித் தஞ்சையை முழுமையான மராட்டியர் சாம்ராஜ்ஜியமாகப் மாற்றி அமைத்து பல அரியப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

முகலாயர்களின் படையெடுப்பால் சிறிது ஆட்டம் கண்ட மராட்டியர்கள் சற்று சமாளித்து கிழக்கிந்தியக் கம்பெனியாருடன் நட்புறவு கொண்டனர். கிழக்கிந்தியக் கம்பெனியாரும், மராட்டியர்கள் துணைகொண்டு தஞ்சைப் பகுதியில் தங்களின் ஆதிக்கத்தைச் செலுத்தினர்.

கால மாற்றத்தால் கிழக்கிந்தியக் கம்பெனியர்கள் மராட்டிய வம்சத்தில் வாரிசு உரிமை ஏற்பட்ட காலக்கட்டத்தில் துளசாஜி மகன் சரபோஜியின் ஒப்பற்ற திறமையையும், அறிவுக் கூர்மையையும் கண்டு தஞ்சையை அவர் வசம் ஒப்புவித்து நாட்டையும் ஆட்சி புரிய வைத்தனர்.

இவரது புத்திக்கூர்மையையும், சமயோசித அறிவையும் பார்த்த சுவார்ட்ஸ் டேனிஷ் மிஸின் இவருடைய தனித்திறமைகளை வெளிக்கொணர முயற்சித்து வெற்றியும் கண்டார். இவரது திறமையால் சரபோஜியின் கலை, அறிவியல், மொழித்திறன், இலக்கியப்பற்று இவை அனைத்தும் வெளிப்பட்டன.

மராட்டியர்களது ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவில் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் ஒரு தனிச்சிறப்பை அடைந்து பல்லாற்றானும் மக்களை ஈர்த்தன. கலை, பண்பாட்டிற்கு கும்பகோணமும், தஞ்சாவூரும் இரண்டு பெரிய மையங்களாக நின்று செயல்பட்டன. வடஇந்தியாவில் காணப்பட்ட ஓவியங்களைத் தென்னிந்தியாவிற்குக் கொண்டுவந்து அறிமுகப்படுத்தி அற்புதமான வளர்ச்சியையும் அடையச் செய்தனர். இந்த கலை மற்றும் பண்பாடு விசயநகர காலத்துப் பாணியுடன் இணைந்து மேலும் மெருகூட்டின. பின்னர் விசயநகரப் பாணி, வடஇந்திய ஓவியம் இவற்றுடன் தங்களது கருத்துக்களையும் கலந்து புதியதோர்

பாணியை தஞ்சை மராட்டியர்கள் தென்பகுதியில் பரப்பி அதனை ஓர் தனித்தன்மை வாய்ந்ததாக மாற்றி வளரச் செய்தனர். இவை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மிகவும் பிரபலமடைந்து காணப்பட்டன.

தந்தத்தாலும், மரத்தாலும் வனையப்பட்ட தென்பகுதி சிற்பங்களும், கலைப்பொருட்களும், பிற கலைப்பொருட்களுக்கு முன் உதாரணமாக அமைந்தன.

தஞ்சாவூர் பாணி ஓவியம் தனிச்சிறப்புடன் இன்றளவும் புகழ் பெற்று விளங்குகிறது. இவை தூய கலப்பில்லா வண்ணங்களைக் கொண்டு, சிவப்பு, மஞ்சள், நீலம், கருப்பு மற்றும் வெள்ளை ஆகிய வண்ணங்கள் மிகுந்த அளவில் பயன்படுத்தப்பட்டன. கண்ணாடியில் வரையும் ஓவியமும் மராட்டியக் காலத்திய ஓவியத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

# 1. தஞ்சாவூர் தர்பார் மண்டப மராட்டியர் கால ஓவியங்கள்

மராட்டியர் கால ஓவியங்கள் பல தனிச்சிறப்பையும், தன்னிகரில்லாத இடத்தையும் பெற அதன் தனித்தன்மையே காரணமாகும். இவர்கள் வரையும் ஓவியங்களில் காணப்படும் நகை அலங்காரம், ஆடை அணிகலன்கள், திரைச்சீலைகள் மற்றும் கட்டடக் கலையின் சிறப்பை எடுத்துக்காட்டும் காட்சிகளும், ஆங்காங்கே உயர்ந்த கம்பீரமான தூண்களும், மாடங்களும், இதுபோன்ற ஓவியங்கள் காண்போரை நேரில் கொண்டு நிறுத்தும் அளவிற்கு வரையப்பட்டுள்ள தன்மை போற்றுதற்குரியதாக திகழ்ந்து வருகின்றன.

ஆடை அணிகலன்களும், மன்னர்களின் மகுடங்களும், தோரணங்களும் இவர்களின் ஓவியத்திறமைக்கு எடுத்துக்காட்டு என்றால் அந்த ஆடைகளிலும், சூட்டிய மகுடங்களிலும் தேவைக்கு ஏற்ப அமைந்த தங்க இழைகளோடும் அமைப்பும், அவற்றில் பதிந்த விலையுயர்ந்த கற்களும், கண்ணாடிகளும் தஞ்சாவூர் மராட்டியர் ஓவியம் என்று அனைத்துலகமும் ஒருமுகமாகப் பார்த்தவுடன் உணரும் தனிச் சிறப்பான கலைப் படைப்பாகவே அன்றும், இன்றும் என்றும் தொடர்ந்து திகழ்ந்து வருகின்றன. தஞ்சை மராட்டியர் ஓவியங்களுக்கே ஒரு தனி வரவேற்பு உலக மக்களிடம் காணப்படுவதைக் கொண்டு அதன் சிறப்பை உணரலாம்.

மராட்டியர் கலைக்கூடத்திலும் மற்றும் மராட்டியர் தர்பார் மண்டபத்திலும் வரையப்பட்டுள்ள மன்னர் உருவங்களும், அவர்களது ஆடை அணிகலன்களும், கூரை ஓவியங்களும் அதனுள்ளே காட்டப்பட்ட மர வேலைப்பாடு போன்ற அமைப்பும் எண்ணி எண்ணி வியக்கத்தக்கவை ஆகும். இங்கு வரையப்பட்டுள்ள ஓவியங்களில் காணப்படும் மன்னர்களும், பிற உருவங்களும், அழகிய பெண்களும், அவர்களின் பருத்த

உடல் வளமும், வீரர்களின் உடல் தோற்றமும், வலிமையையும் காணும்பொழுது எவ்வளவு செழிப்புடன் வாழ்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

## தர்பார் மண்டபம்

தர்பார் மண்டபம், அரண்மனை வளாகத்தில் நாயக்கர்களால் கட்டப்பட்டு அவர்களது ஆட்சிக்குப் பின்னர் மராட்டியர்களால் பராமரிக்கப்பட்டு சில பகுதிகளைப் புனரமைப்பு செய்து இதனை புதிய பொலிவுடன் தர்பார் மண்டபம் என அழைத்தனர். நாயக்க, மராட்டிய மன்னர்கள் நீதி பரிபாலனம் செய்த இடம், குற்றவாளிகளை விசாரித்து அதற்குரிய தண்டனையையும் வழங்கிய இடமாகும். இந்த மண்டபம் அமைப்பே ஓர் அலாதியானது.

சரஸ்வதி மகால் நூல் நிலையத்தின் கிழக்குப் பகுதியில் நுழைவு வாயில் ஒன்று உள்ளது. இதன் வழியாக வரும்பொழுது மேற்கு பார்த்த நிலையில் ஒரு திறந்தவெளி முற்றத்துடன் மரத்தூண்கள் கொண்ட முன்மண்டப அமைப்புடன் கூடிய அகன்ற கீழ்தாழ்வாரம் காணப்படும். இதன் மையப்பகுதியில் சில படிகள் (மரத்தால் ஆனது) அதன்மீது ஏறிச் சென்றால் தர்பார் மண்டபத்தை அடையலாம். இந்த மண்டபத்தில் எண்பட்டை வடிவத்தில் சுதையால் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் காணப்படும் வளைவுகள், அதன் தாங்கிகள், அதன்மேல் காணப்படும் சுதை உருவங்களாக விடையூர்தியில் சிவபெருமான், கருடன் மீது திருமால், இந்திரன், இந்திராணி போன்ற பல வண்ணம் பூசப்பட்ட சுதை உருவங்களைக் கண்டு மகிழும் வண்ணம் அமைத்துள்ளனர். இதன் மேற்புறச் சுவரில் மல்யுத்த வீரர்கள் யுத்தம் புரிவது போல ஓவியங்கள் வரையப் பட்டிருந்தன. அவை தற்பொழுது சிதைந்து போய்விட்டன. இருப்பினும், விதானத்தில் வரையப்பட்ட ஓவியங்கள், பறவைகள், தேவகன்னிகள் போன்றவை கண்ணுக்கு விருந்தாக அமைகின்றன.

தர்பார் மண்டபத்தின் மையப்பகுதியில் மராட்டிய மன்னர் சிவாஜி ஓவியமும், அருகில் அமைச்சர் தளவாய் ஆகியோரின்

ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களுக்கு முன்பகுதியில் ஒரு மேடை அமைக்கப்பட்டு மரத்தால் தோரணங்கள் காட்டப் பட்டுள்ளன. இத்தோரணங்கள் முழுவதும் கண்ணாடிகள் கொண்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில்தான் மன்னர் அமர்ந்து நீதி வழங்குவது வழக்கம். இதன் அருகில் நீதி வழங்கியதும் உடன் சபையைக் கலைத்து, தான் விடைபெற்று செல்ல வழிவகையையும் அமைத்துள்ளதை இன்றும் காணலாம். அரசரின் முன்னால் அமைந்துள்ள மண்டப மையப் பகுதியில்தான் குற்றவாளிகளை நிறுத்தி, விசாரித்து நீதி வழங்கியதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தர்பார் மண்டபத்தின் வடக்குப் பகுதியில் மாடியில் மர சன்னல்கள் அமைக்கப்பட்டு, அங்கு இளவரசிகள் மற்றும் உயர் குடும்பத்தினர் அமர்ந்து நீதி பரிபாலனத்தைக் காணுவதற்கு ஏற்ப அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இந்த தர்பார் மண்டபத்தின் எதிரில் அமைந்த திறந்தவெளி முற்றத்தில் மல்யுத்தம், கிடாய்ச் சண்டை போன்ற தமிழர்களின் வீர விளையாட்டுக்களை நிகழ்த்தியுள்ளனர். மேலும் மராட்டியர்கள் வீர விளையாட்டிலும், மல்யுத்தத்திலும் ஆர்வமிக்கவர்களாக இருந்துள்ளனர்.

இம்மண்டபத்தின் மேற்குப்புறச் சுவரிலும், வடக்குப்புறச் சுவரிலும் மராட்டியர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றை தொல்லியல் துறையின் மூலம் வெளிக்கொணரும்போது மராட்டியர் கால ஓவியங்களுக்கு கீழே விசயநகர காலத்து ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டன. எனவே விசயநகர காலத்திலே இந்த மண்டபம் செயல்பாட்டில் இருந்து சிறப்பு பெற்றிருத்தல் வேண்டும். பின்னர் மராட்டியர்களும் அதன் வழியாகப் பின்பற்றி இம்மண்டபத்தை மேலும் பொலிவாக்கி, வண்ண ஓவியங்களால் அலங்கரித்து சிறப்பு பெறச் செய்துள்ளனர் என்பதை இதன் மூலம் அறிய முடிகின்றன.

மராட்டிய அரச மரபினர் ஆங்கிலேயரின் துணை கொண்டுதான் ஆட்சியைத் தொடரவேண்டியிருந்தது. அவர்களோ

சூரியன் தோன்றி மறையும் நாடுகள் அனைத்தும் தங்களுடைய நாடாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். இத்தகைய எண்ணம் கொண்ட ஆங்கிலேயரை எதிர்த்து பிரான்சு நாட்டைச் சார்ந்த மாவீரன் நெப்போலியன் போர்க்கொடி உயர்த்தினான் ஆங்கிலேயர்களுக்கும், நெப்போலியனுக்கும் இடையே பிரான்சு நாட்டின் வடக்கிலுள்ள வாட்டர்லூ என்ற இடத்தில் கி.பி. 1814-இல் பெரும் போர் நடைபெற்றது. இப்போர் பிரான்சு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறது என்று உலக நாடுகள் எண்ணின. ஆங்கிலேயர்களது படைபலத்தைக் காட்டிலும் பிரான்சு நாட்டின் படைபலம் அதிகமாக இருந்ததால் நெப்போலியன் வெற்றி பெறும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் பிரஷ்யா நாட்டின் படைகள் ஆங்கிலேயர்களுக்கு உதவிக்கு வந்ததால் பிரான்சு நாடு தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. மாவீரன் நெப்போலியன் போரில் தோற்கடிக்கப்பட்டார். ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர்.

வரலாற்றில் மிகவும் சிறப்பானதொரு இடத்தைப் பெற்ற இந்த வெற்றி ஆங்கிலேயர்களுக்கு மட்டுமின்றி அவர்களுடன் நட்பு கொண்ட நாடுகள் அனைத்தும் இந்த பெரும் வெற்றியை மகிழ்வுடன் கொண்டாடின. தமிழ்நாட்டில் தஞ்சையை ஆட்சி புரிந்த மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோஜியும் இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். அதன் நினைவாக ஓர் அரிய கலைப் படைப்பைப் படைத்தார். அத்தகைய கலைப்படைப்பு ஒரு வெற்றித் தூணாகவும், நினைவுச் சின்னமாகவும் அமைவது போல கட்டப்பட்டதுதான் மனோரா. இது கி.பி. 1814-இல் கட்டப்பட்டதாகும்.

# 2. மனோரா

தஞ்சையில் இருந்து பட்டுக்கோட்டை வட்டம், பட்டுக் கோட்டையிலிருந்து 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சரபேந்திரராஜன் பட்டினம் என்னும் ஊரின் அருகில் காணப்படும் கடற்கரையில் கட்டப்பட்டுள்ளது. ‘சேதுபாவா சத்திரம்’ எனும் ஊராட்சியில், சரபேந்திரராஜன் பட்டினம் என்று அழைக்கப்பட்ட ஊர் முன்னர் சாளுவநாயக்கன் பட்டினம் என்று அழைக்கப்பட்டது. இப்பகுதி வங்கக் கடலோரம் இயற்கை எழிலோடு திகழ்கின்றது. மனோரா எனும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நினைவுச்சின்னம் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்டு வரும் மரபுச் சின்னமாகும். மனோரா என்பது மினார் என்ற சொல்லில் இருந்து வந்தது. மினார் என்பது ரோம் நாட்டிலுள்ள டிராகனைப் போன்றது! என்று கட்டடக்கலை வல்லுநர் பெர்கூசன் கூறுகின்றார். தூணைப் போன்ற உயரமான கட்டட அமைப்பைக் கொண்ட இத்தகைய சின்னம். மீனார் அரச மரபைச் சார்ந்த ஏம்பா என்ற மன்னரால் இரண்டு மினார்கள் (கி.பி. 1425-64) அவர்களின் வெற்றியின் நினைவாகக் கட்டினார்கள். இதனை வெற்றித்தூண் என்று அழைத்தனர். அதனைப் போன்றதுதான் மனோராவும். இதுவும் ஒரு வெற்றித் தூணாகவும் அக்காலத்திய கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்துள்ளது.

## மனோரா கட்டடக்கலை

இக்கட்டடம் 22.30 மீ. உயரமுடைய இக்கட்டடம் ஒன்பது அடுக்குகளைக் கொண்டதாகவும்; அறுகோண அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. இதைச் சுற்றிலும் பெரிய அகழி ஒன்றும், அதையடுத்து மதில் சுவரும் காணப்படுகின்றது. ஒரு கோட்டையின் அமைப்பு போல அமைத்துள்ளனர். நுழைவு வாயிலில் அகழியின் மேல் ஓர் படிக்கட்டு, இவை தேவைக்கேற்ப இரண்டு மதில் சுவர்களுக்கும் இடையில் போடப்பட்டு பின்னர் மூடும் அமைப்பில் அமைத்துள்ளனர். தற்பொழுது ஒரு பாலம் போன்று அமைத்து,

அகழி மீது பாதை ஒன்றைக் கட்டி உள்ளே செல்ல வழி அமைத்துள்ளனர். அகழியைச் சுற்றிலும் கட்டப்பட்ட கோட்டையின் மதில் சுவர், அதன் மேல்பகுதியில் படைவீரர்கள் ஆயுதங்களை ஏந்திய வண்ணமும், இடைப்பட்ட பகுதியில் பீரங்கியை நிறுத்தி படைவீரர்கள் பகைவர்களைக் தாக்க தயார் நிலையில் நிற்கும் வண்ணமும் அமைத்துள்ளனர். இச்செய்திகள் அனைத்தும் கி.பி. 1814-ஆம் ஆண்டு மோடி ஆவணத்தில் (மராட்டியர் காலத்திய ஆவணம்) குறிப்பிடப்பட்டுள்ளது.

கோட்டைக் கொத்தளங்கள், குதிரை லாயங்கள் என காலாட்படை வீரர்களுக்கு அமைவிடமும், குதிரைகள் தங்க இடமும் அமைத்துக் கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு மூன்று நுழைவு வாயில்கள் உள்ளன. இக்கட்டட கலைப்பாணி குறிப்பிடத்தக்க சிறப்பினைப் பெற்றது. ஆங்கிலேயர்களின் உணர்வைப் புரிந்து கட்டப்பட்டது போலத் தோன்றுகின்றது.

இந்த மனோரா கோட்டையும் அதன் மேலே எழுப்பிய தூண் அமைப்பும், அழகிய தூண்களைக் கொண்டும், அடிப்பகுதி அகன்றும், மேலே செல்லச் செல்ல சற்று குறுகிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஒன்பது அடுக்கிலும் புறாக் கூண்டு போல துவாரம் அமைத்துள்ள அழகும், தற்பொழுது அதிக அளவில் புறாக்கள் தங்கி இருப்பதும் காண்போரை வியக்கச்செய்யும் அளவிற்கு அமைந்துள்ளது.

ஒன்பது அடுக்கிற்கும் செல்வதற்கு வளைவு, வளைவான குறுகிய படிக்கட்டுகளும், மேலே நின்று கடற்கரையையும், கடலின் அலையையும், அதன் அழகையும் இரண்டாம் சரபோஜி மன்னன் தன் குடும்பத்துடன் இங்கு வந்து தங்கி இதனைக் கண்டு இன்புற்று சென்றுள்ளார் என்பதையும் அவரது மோடி குறிப்புகள் கூறுகின்றன.

# 3. நினைவுச்சின்னங்கள் குறித்த கல்வெட்டுகள்

இந்த புகழ்வாய்ந்த நினைவுச்சின்னத்தை இரண்டாம் சரபோஜி எதற்காக எடுப்பித்தார் என்பதை அவர் காலத்திலேயே கல்வெட்டுக்களால் வெட்டி பதிவு செய்து சென்றுள்ளார். மராட்டிய மன்னர்கள் ஆட்சி புரிந்தபொழுது தமிழ், தெலுங்கு, இசுலாமியர், மராட்டியர், ஆங்கிலேயர் என பலரும் இங்கு கலந்து வாழ்ந்தமையால் இவர்கள் அனைவரும் நன்கு அறியும் வண்ணம் இந்த ஐந்து மொழிகளிலும் கல்வெட்டை வெட்டி, நான்கு பக்கங்களிலும் பதித்துச் சென்றுள்ளான். இரண்டாம் சரபோஜியும் பல மொழிகளைக் கற்றவன். பன்மொழி வித்தகன் ஆவான். எனவே அனைத்து மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவனாதலால் ஐந்து மொழிகளிலும் தன் நேரடிப் பார்வையிலே கல்வெட்டை வெட்டி பதித்துச் சென்றுள்ளான்.

## தமிழ் கல்வெட்டின் வாசகம்

> "இங்கிலீசு சாதியார் தங்கள் ஆயுதங்களினாலமைந்த செய சந்தோஷங்களையும் போனபாற்தெயின் தாழ்த்தப்படுதலையும் நினைவுகூறத்தக்கதாக இங்கிலீசு துரைத்தனத்தின் சினேகிதரும் படைத்தலைவருமாகிய தஞ்சாவூர் சீர்மை மகாராசாச் சத்திரபதி சரபோசி மகாராசா அவர்கள் இந்த உப்பரிகையைக் கட்டிவைத்தார் சகம் 1736"

பல்வேறு காலகட்டங்களிலும் வரலாற்றுலகில் இன்று வரை நிலைத்து நிற்பவை கல்வெட்டுகளே. இந்த ஆதாரப்பூர்வமான சான்றுகள் இல்லையெனில் பல வரலாற்று நிகழ்வுகள் நமக்குப் புலனாகாமலேயே அழிந்துபட்டிருக்கும். இதனை உணர்ந்த நம் மன்னர்கள் காலங்காலமாக நடைபெறும் நிகழ்வுகளை அவ்விடத்திலேயே கல்வெட்டுகளாக வெட்டி பதிவு செய்தது

குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறு கலை, இலக்கியம், ஓவியம் என பல்லாற்றானும் திறமை கொண்ட இரண்டாம் சரபோஜி, நாட்டு மக்களின் நலனைக் கைக்கொண்டு அனைத்து இன மொழி பேசும் மக்களும் உணரும்படி அவரவர்களுக்குப் புரியும் மொழியில் கல்வெட்டுகளை வெட்டி பதிவு செய்துள்ளார்கள். இரண்டாம் சரபோஜி பிற மொழிகளையும், அதன் பயன்பாட்டையும் நன்கு உணர்ந்தவராகத் திகழ்ந்தார் என்பதையும் அவர் வெட்டி வைத்த கல்வெட்டுகள் மூலம் இங்கு உணர முடிகின்றது.

## தெலுங்குக் கல்வெட்டு வாசகத்தின் தமிழாக்கம்

> "மகாராஜஸ்ரீ சத்ரபதி மகாராஜ மகாராஜனும் ஆங்கில கம்பெனி அவர்களுடைய தோழனாகியவரும், மேலும் நட்புள்ள அவர்களுடைய தோழமையினரும் கலந்து கொண்டு தமது ஆயுதங்களால் புகழ்மிக்க வெற்றிக் கொண்டமைக்காகவும் இந்த போனவர்த்தினால் கீர்த்தி அடைந்தும் இப்புகழ் அனுபவிக்கக் கடவார்களாக எனவும் இத்துவஜ சௌதத்தை நிறுவப்பட்டதாகும். சாலீவாகன சகம் 1736 ஆகும்."

இவற்றில் குறிக்கும் போனவர்த்தி என்பது நெப்போலியனைக் குறிப்பதாகும்.

## ஆங்கிலக் கல்வெட்டு வாசகம்

"His Highness Maharajah Sirforjee Rajah of Tanjore The Friend and Ally of the British Government to Commemorate the triumphs Erected this column of British Arms and the Downfall of Bonaparte 1814"

ஐந்து மொழிகளில் கல்வெட்டுக்கள் காணப்படுவதும், அதுவும் ஒரே செய்தியைக் குறிப்பதும் இங்கு மட்டுமே காணலாம். இக்கல்வெட்டுக்களில் ஆங்கிலத்தில் 'column' என்றும், தமிழில் 'உப்பரிகை' என்றும், தெலுங்கில் 'துவஜ சௌதம்' என்றும் வெற்றித் தூண் என்பதை சுவைபட குறித்தமை, பல பெயரிட்டு அழைத்தமை, இவை இரண்டும் மன்னனின் சொல் விளையாட்டுத் திறமையையே வெளிக்காட்டுகிறது. ஐந்து மொழி கல்வெட்டுகளான

தமிழ், ஆங்கிலம், உருது, மராட்டியம் இவற்றில் மராட்டிய கல்வெட்டு முற்றிலும் சிதைந்துவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## நெப்போலியனும் மனோரா நினைவுச்சின்னமும்

பிரஞ்சுப் புரட்சி கி.பி. 1789-இல் ஏற்பட்டபொழுது அப்புரட்சியில் நெப்போலியன் ஈடுபாடு கொண்டார். கி.பி. 1795 முதல் 1799 வரை பிரான்சின் சிக்கலான அரசியல் சூழ்நிலை நெப்போலியனைப் படைத்தலைமை ஏற்க வாய்ப்பளித்தது. வீரமும், தன்னம்பிக்கையும் நிறைந்தவன் நெப்போலியன். எதிரிகளைத் துச்சமென மதித்துப் போரினை விரும்பி ஏற்கும் தன்னிகரில்லா வீரனாகத் திகழ்ந்தவன் நெப்போலியன். எனவேதான் அத்தகு வீரன் தலைமையேற்று வழிநடத்திய போர் என்றும், மேலும் நெப்போலியன் தழுவிய தோல்வி இவை அனைத்தும் அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. அத்தகு வீரமிக்க நெப்போலியனின் தோல்வியைக் கொண்டாடியது பிற நாடுகள். எனவேதான் மனோரா எனும் நினைவுச்சின்னம் எழுந்ததே மாவீரன் நெப்போலியனின் தோல்வியை உலகுக்கு உணர்த்தவே என்பது இதன் நோக்கமாகும்.

## மராட்டிய மன்னர்கள் குடும்ப கல்லறைகள்

தஞ்சையில் மராட்டிய மன்னர்கள் அரண்மனை இருக்கும் இடத்திலிருந்து சற்று தொலைவே வடக்குத் திசையில் ராஜா கோரி என்ற இடம் அமைந்துள்ளது. அங்குதான் மராட்டிய வம்சத்தைச் சார்ந்த ராஜாக்களையும் அவர்களது மனைவிமார்களையும் அடக்கம் செய்துள்ளனர். அவர்களை அடக்கம் செய்த இடத்தில் சமாதியை கோயில் அமைப்பில் கட்டி, அதில் கல்வெட்டு வாசகத்தையும் வெட்டி வைத்து பதிவு செய்துள்ளனர். மராட்டியர்கள் தங்களின் வாழ்க்கை முறையையும், இறுதி காலக்கட்டத்தையும் முறையாக வரலாற்று உலகிற்கு பதிவு செய்ததன் மூலம் சிறப்படைகின்றனர் என்பதை இதன் மூலம் அறியலாம். இது தொடர்பான கல்வெட்டுச் செய்திகள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்ட தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி-I-இல் வெளியிடப்பட்டுள்ளது.

# 5. தஞ்சையை ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னர்கள்

| | |
|---|---|
| 1. ஏகோஜி - 1 | கி.பி. 1674 - 1684 |
| 2. சகஜி | கி.பி. 1684 - 1711 |
| 3. சரபோஜி - 1 | கி.பி. 1711 - 1729 |
| 4. துக்கோஜி | கி.பி. 1729 - 1735 |
| 5. ஏகோஜி - 2 | கி.பி. 1735 - 1737 |
| 6. சுசலன் பாய் | கி.பி. 1737 - 1738 |
| 7. காட்டு ராஜா | கி.பி. 1738 |
| 8. சையாஜி | கி.பி. 1738 |
| 9. பிரதாப்சிங் | கி.பி. 1739 - 1763 |
| 10. துளசாஜி | கி.பி. 1763 - 1787 |
| 11. அமர்சிங் | கி.பி. 1787 - 1798 |
| 12. இரண்டாம் சரபோஜி | கி.பி. 1798 - 1832 |
| 13. சிவாஜி | கி.பி. 1832 - 1855 |

## இரண்டாம் சரபோஜி

தஞ்சையை ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னர்களில் மிகவும் திறமை மிக்கவராகவும், புகழ் பெற்றவராகவும் திகழ்ந்தவர் இரண்டாம் சரபோஜி மன்னர் என்றால் அது மிகை அல்ல.

கி.பி. 1763-இல் இருந்து 1787 வரை தஞ்சையை ஆட்சிபுரிந்த துளசாஜி எனும் மன்னர் தனக்கு வாரிசு இல்லாத காரணத்தினால் சரபோஜியைத் தனது தத்துப்பிள்ளையாக எடுத்துக்கொண்டார். துளசாஜி இறந்த பின்னர் அவரது சகோதரர் அமர்சிங் மேற்பார்வையில் இரண்டாம் சரபோஜி வளர்ந்தார்.

கி.பி. 1798-இல் துளசாஜியின் உண்மையான வாரிசு இரண்டாம் சரபோஜிதான் என்று கிழக்கிந்தியக் கம்பெனி அறிவித்ததை அடுத்து சரபோஜி தஞ்சையின் அரசராக மகுடம் சூட்டினார்.

மன்னர் சரபோஜி சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழி களிலும் வல்லமை பெற்றிருந்தார். மருத்துவம், கலை, இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஈடுபாடு கொண்டதனால் பழமையான ஓலைச்சுவடிகள் சேகரிப்பதையும், படிப்பதையும் தமது பொழுதுபோக்காகக் கொண்டிருந்துள்ளார்.

இவர் காலத்தில் சேகரித்து வைத்திருந்த அரிய நூல் களையும், ஓலைச்சுவடிகளையும் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் வைத்து அதனை விரிவுபடுத்தி அறியப்படாத பல தமிழ் இலக்கியங்களையும் இவர் தமிழுலகிற்கு வெளிக்கொணர்ந்த பெருமையைப் பெற்றவர். இவரது சேகரிப்பில் அதிக அளவில் மோடி, சமஸ்கிருதம் மொழிகளே காணப்பட்டன.

சரபோஜி மன்னர் தனது இளமைப் பருவத்தில் நேசித்த முத்தம்பாள் இளமையிலேயே இறந்துபட்டதால் அவர்களது நினைவாக "முத்தாம்பாபுரம் சத்திரம்" எனும் சத்திரம் அமைத்து வழிப்போக்கர்களுக்கு உணவளிக்க ஏற்பாடுகளைச் செய்தார். மேலும் பல சத்திரங்களையும், கோயில்களையும் எடுப்பித்தும், புதுப்பித்தும் இறைவழிபாட்டிற்கு வழிவகுத்தார்.

இவர் தனது ஆட்சிக்காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளார். பிரஹதீஸ்வரர் கோயிலின் கலசத்தில் அவர் செய்த திருப்பணி செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. தஞ்சை அரண்மனையிலும், தஞ்சைப் பெரிய கோயிலிலும் பல ஓவியங்கள் தீட்டி மகிழ்ந்துள்ளார். இவர் 1833-ல் மறைந்தார்.

மராட்டிய மன்னர்களில் மிகவும் தனிச்சிறப்பைப் பெற்றதை இங்கு அவரது நினைவாக விட்டுச்சென்ற கலைப்படைப்புக்களும், மனோரா போன்ற சின்னங்களும் இன்றும் அவர் புகழைப் பறை சாற்றிக் கொண்டுள்ளன.

## மனோரா - நினைவுச்சின்னம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் மூலம் அரசாணை எண். அ.ஆ.எண்.23/த.வ.ப.துறை/நாள்:12.02.1993-ன் படி பாதுகாக்கப்பட்ட சின்னம் என அறிவிக்கப்பட்டு இதன் உள்ளே ஓர் அலுவலகம் அமைத்து இந்நினைவுச்சின்னத்தை பாதுகாத்து வருகின்றனர். தொல்லியல் துறையின் பாதுகாப்புப் பிரிவு பொறியாளர்களின் உதவியோடு தமிழ்நாடு அரசு நிதியைப் பெற்று புனரமைப்பு செய்து பழமை மாறாமல் பொலிவுடன் பாதுகாக்கப்பட்டு வரப்படுகின்றது.


❋❋❋

# 6. துணைநின்ற நூல்கள்



1. நடன. காசிநாதன் — மனோரா - சிறு கையேடு தொல்லியல் துறை கையேடு, எண்: 53, 1979
2. முனைவர் இராசாராம், இஆப., முனைவர் இராகுபவுன் துரை எம்.ஏ., பிஎச்.டி — மனோரா சரஸ்வதி மகால் நூலகம் தஞ்சாவூர் 2000
3. செ. இராசு 1987 — தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் தஞ்சாவூர்
4. V. விருத்தகிரீசன் — The Nayak of Tanjore
5. C. சிவராமமூர்த்தி — South Indian Paintings National Museum, New Delhi, 1968
6. ச. செல்வராஜ — 1977-இல் தொல்லியல் துறை மூலம் திரு. கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர், திரு. மா. செந்தில் செல்வக்குமரன் ஆகியோருடன் இந்நூலாசிரியரும் இணைந்து மராட்டியர் ஓவியங்களை வெளிக்கொணரும் பணி மேற்கொள்ளப்பட்டது. அதுசமயம் விசயநகர ஓவியங்கள் இருந்தது அறிந்து வெளிக்கொணரும் பணி மேற்கொண்டு அவ்வோவியங்கள் முழுமையாக வெளிக்கொணரப் பட்டது.
7. — தஞ்சாவூர் வட்டக்கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை, சென்னை-8.


# வரையடங்கள்
# நிழற்படங்கள்

மனோரா நினைவுச் சின்னத்தின் வெட்டுத்தோற்றம்




மனோரா நினைவுச் சின்னம் நிலமட்டத்து வரைபடம்







மராட்டியர் அரண்மனையின் தோற்றம் - சார்ஜா மாடி, தஞ்சாவூர்




மராட்டியர்கால ஓவியங்கள் - தர்பார் மண்டப விதானப்பகுதி




மராட்டியர் கலைப்பாணி - தர்பார் மண்டப
முகப்புத் தோற்றம். தஞ்சாவூர்




மராட்டியர் கலைப்பாணி - தர்பார் மண்டபத்தின்
தூண்களும் விதான அமைப்பும், தஞ்சாவூர்



மனோரா நினைவுச்சின்னத்தின் - வெளிப்புறத் தோற்றம்



மனோரா - நுழைவு வாயில் உட்புறத் தோற்றம்



மராட்டியர் தர்பார் மண்டபத்தில் காணப்படும் வண்ண ஓவியங்கள்

